**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்</u>**

**<u>முன்னிலை: திருமதி.எம். சந்தோஷம்., பி.எஸ்.சி., பி.எல்.,</u>**

**<u>மாவட்ட உரிமையியல் நீதிபதி, சூலூர்</u>**

திருவள்ளுவர் ஆண்டு 2056 ஆண்டு விசுவாவசு வருடம், புரட்டாசி மாதம் 21ம் நாள்

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 7-ம் நாள் செவ்வாய்க்கிழமை

**<u>இடைக்கால மனு எண்.3/2024</u>**

**in**

**<u>அசல் வழக்கு எண். 79/2024</u>**

P. செல்வராஜ், த/பெ. பழனிச்சாமிக்கோனார், இந்து,

வயது 60, வசிப்பிடம் கதவு எண்.5/44, கிழக்கு தோட்டம்,

செலக்கரிச்சல் கிராமம், சூலூர் வட்டம், கோயமுத்தூர். ...மனுதாரர் / வாதி

//எதிர்//

1. செந்தில்பிரபு, த/பெ. நடராஜ், இந்து,

வசிப்பிடம் கதவு எண்.6/9, பல்லடம் மெயின் ரோடு,

செலக்கரிசல், சூலூர் தாலூக்கா, கோவை மாவட்டம்.

2. B. ராசு (எ) பரமகுருசாமி, த/பெ. மந்திரியப்பன், இந்து,

வயது 50, வசிப்பிடம் பங்களாத் தோட்டம்,

வேலப்பநாய்க்கன்பாளையம், சுல்தான்பேட்டை வழி,

சூலூர் தாலூக்கா, கோவை மாவட்டம்.

3. S. ரங்கநாதன், த/பெ. சென்னியப்பன், இந்து,

வசிப்பிடம் வேலப்பநாய்க்கன்பாளையம், சுல்தான்

பேட்டை வழி, சூலூர் தாலூக்கா, கோவை மாவட்டம்.

4. P. ராமசாமி, த/பெ. பழனிச்சாமி, இந்து,

வசிப்பிடம் கோவில் வீடு, பரமசிவன் கோவில் அருகில்,

செலக்கரிச்சல், சூலூர் தாலூக்கா, கோவை மாவட்டம்.

5. P. ரங்கநாதன், த/பெ. பழனிச்சாமி, இந்து,

வசிப்பிடம் கோவில் வீடு, பரமசிவன் கோவில் அருகில்,

செலக்கரிச்சல், சூலூர் தாலூக்கா, கோவை மாவட்டம்.

...எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை 26 விதி 9ன் கீழ் வழக்கறிஞர் ஆணையரை நியமித்து இம்மனுவில் சொத்து விபரத்தில் கண்ட சொத்துக்களை சர்வேயர் மூலம் நேரில் சென்று கள ஆய்வு செய்தும் சொத்தை அளவீடு செய்தும் புகைப்படம் எடுத்து அறிக்கையாக தாக்கல் செய்ய வேண்டி மனுதாரர்/வாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கலான நாள் : 01.07.2024

மனுவின் மீது வில்லை : ரூ. 20/-

இந்த மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R. நாகராஜன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. M. முருகேஷ், அவர்கள் ஆஜராகியும் இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய கண்காணிப்பில் இருந்து வந்து இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## உத்தரவாணையுரை

முடிவாக வழக்கறிஞர் திரு.D.தர்சனா, (M.S.No.7525/2021), அவர்கள் நீதிமன்ற ஆணையராக நியமிக்கப்படுகிறார். நீதிமன்ற ஆணையர் ஊதியமாக ரூ.15,000/- நியமிக்கப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் இருதரப்பினருக்கும் உரிய அறிவிப்பு கொடுத்து வாதியின் சொத்தையும் பிரதிவாதிகளின் சொத்தையும் நில அளவையர் உதவியுடன் மனு சொத்துக்களை அளவீடு செய்தும், எல்லை விபரம் குறித்து தற்போதைய நிலையையும், புகைப்படம் எடுத்தும் அறிக்கை

தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்த பிறகு அவருக்கு உரிய ஊதியம் வழங்க உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய வாய்தா 07.11.2025..

**செலவு தொகை பட்டியல்**

//இல்லை//

(செலவு தொகைப் பட்டியல் இருதரப்பிலும் தாக்கல் செய்யப்படவில்லை)

**சொத்து விபரம்**

திருப்பூர் பதிவு மாவட்டம், சூலூர் துணைப்பதிவு மாவட்டம், பல்லடம் வட்டம், சுல்தான்பேட்டை பஞ்சாயத்து யூனியனுக்குச் சேர்ந்த செலக்கரிச்சல் பஞ்சாயத்துக்கு உட்பட்ட செலக்கரிச்சல் கிராமத்தில், க.ச.23/2 (இருபத்தி மூன்று உட்பிரிவு இரண்டு) நெ காலை தோட்டம், பு.ஏ.4.14 (ஏக்கர் நான்கு செண்டு பதினான்கு)-க்கு தரம் ரூ.3.37, இந்த விஸ்தீரணமுள்ள பூமி பூராவும்.

ஷை 23/2 நெ.காலையிலுள்ள துரஸ்து கிணறு ஒன்று பூராவும். ஷை கிணற்றில் வைத்துள்ள 5 எச்.பி. எலக்ட்ரிக் மோட்டார் பம்பு செட் ஒன்று பூராவும் அதற்கு இணைக்கப்பட்டுள்ள மின் இணைப்பு எண்.316-ம், மாமூல் வழிநடை பாத்தியங்களும் சகிதம்.

2025 ம் ஆண்டு அக்டோபர் 7 ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையிட்டு வழங்கப்பட்டது.

Sd/M.Santhosham

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

Final Order

IA.No.3/2024 in

OS.79/2024 in

Dated:07.10.2025

DMC, Sulur.